4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

சாட்சியின் சாட்சியம் **திரு.M.நம்பிராஜன்,பி.ஏ.,பி.எல்.,** 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

**MCOP No.35/2022** **நாள்: 05.03.2026** **எ.ம.சா.1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | Hari G Sehwag | தொழில் | : | உதவியாளர், RTO அலுலவகம் |
| த/பெ | : | கிரிதரன் | கிராமம் | : | உடுமலைபேட்டை |
| வயது | : | 28 | தாலுகா | : | உடுமலைபேட்டை |
| | | | மாவட்டம் | : | திருப்பூர் |

**சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, முதல் விசாரணை -**

நான் இந்த மனுவில் 1வது எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாவேன். விபத்து சம்பந்தப்பட்ட வாகனங்களை போலிசார் கொடுத்த வேண்டுகோள் கடிதத்தின் அடிப்படையில் மோட்டார் வாகன ஆய்வாளர் ஆய்வு செய்தார். மேற்படி வேண்டுகோள் கடிதத்துடன் சம்பந்தப்பட்ட முதல் தகவல் அறிக்கையையும் காவல் ஆய்வாளர் இணைத்திருந்தார். முதல் தகவல் அறிக்கையில் சொல்லியுள்ள சங்கதிகளின் அடிப்படையில் மோட்டார் வாகன ஆய்வாளர் ஆய்வு செய்தார். வேண்டுகோள் கடிதத்தின் அடிப்படையில் மோட்டார் வாகன ஆய்வளார் TN 58 E 8889, TN 41 AU 6181, KA 44 4429 ஆகிய வாகனங்களை ஆய்வு செய்துள்ளார். ஆய்வின் அடிப்படையில் தான் மோட்டார் வாகன ஆய்வறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது. ஆய்வு மேற்கொள்ளும் போது வாகனங்களில் என்னென்ன சேதங்கள் உள்ளது என்பதை அதை ஆய்வாளர் தெரிவிப்பார். மேற்படி ஆய்வு மேற்கொண்ட 3 வாகனங்களின் அறிக்கை நகல்களை தாக்கல் செய்கிறேன். அவை எ.ம.சா.ஆ.1 முதல் 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. KA 44 4429 என்ற பதிவெண் கொண்ட வாகனத்திற்கு ஆய்வின்போது சேதம் இல்லை என்று மோட்டார் வாகன ஆய்வாளர்

அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். மேற்படி அறிக்கையில் விபத்தினால் மேற்படி வாகனத்திற்கு சேதம் இருப்பதாக மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையில் குறிப்பிடவே இல்லை. TN 58 E 8889 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தை ஓட்டிய நபர் விபத்தில் காலமாகிவிட்டார் என்று முதல் தகவல் அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளது. மேற்படி வாகனத்திற்கு என்னென்ன சேதங்கள் இருந்தது என்ற விவரத்தை மோட்டார் வாகன ஆய்வாளர் ஆய்வறிக்கையில் சொல்லியுள்ளார்.

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை –**

KA 44 4429 என்ற பதிவெண் கொண்ட இன்னோவா கார் என்றால் சரிதான். மேற்படி வாகனம் காரில் பெரிய வாகனம் என்றால் சரிதான். TN 58 E 8889 என்ற பதிவெண் கொண்ட YAMAHA இரு சக்கர வாகனம் என்றால் சரிதான். YAMAHA இரு சக்கர வாகனத்தின் மீது இன்னோவா கார் மோதினால் இன்னோவா காருக்கு சேதம் ஏற்பட முடியாது என்று கருத முடியாது என்றால் சரிதான். TN 41 AU 6181 என்ற பதிவெண் கொண்ட லாரிக்கும் ஆய்வின் போது சேதம் இல்லை என்றால் சரிதான். YAMAHA இரு சக்கர வாகனத்திற்கு ஆய்வின் போது சேதம் இருப்பதாக மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையில் தெரிவித்துள்ளார் என்றால் சரிதான். இன்னோவா காரும், லாரியும், YAMAHA இரு சக்கர வாகனத்தின் மீது மோதும் போது YAMAHA இரு சக்கர வாகனத்திற்கு சேதாரம் ஏற்பட வாய்ப்புண்டு என்றால் சரிதான்.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

M NAMBIRAJAN
Digitally signed by M NAMBIRAJAN
Date: 2026.03.05 17:04:39 +0530

4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.